சத்தியம் ஒளிருமிடத்தில் வெற்றி சூழும்

# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [மார்ச் – மே 2013]

தொலை நோக்கு: காந்திய வழியில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

காந்திகிராமத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 29–04–2013 அன்று காந்திகிராம அறக்கட்டளையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு காந்திகிராம கிராமிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அறக்கட்டளையின் தலைவர் திருமதி லட்சுமி பிரணேஷ் அவர்கள் தலைமை ஏற்றார்கள். காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கே.சிவக்குமார் அவர்கள் காந்திகிராம ஒருங்கிணைப்புக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் மாதிரிக் கிராமம் உருவாக்குவதன் நோக்கம் பற்றியும் எடுத்துரைத்தார். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் காந்திய சிந்தனை மற்றும் அமைதியியல் துறை முனைவர் திரு. எஸ். நாராயணசாமி அவர்கள் மாதிரிக் கிராமங்களில் இதுவரை நடைபெற்றுள்ள பணிகள் பற்றி எடுத்துரைத்தார். திருமதி இரேவதி அவர்கள் மாதிரிக் கிராமப் பணிக்காக இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிகள் மற்றும் அதனுடைய பயன்பாடு பற்றியும் விளக்கினார்.

திருமதி லட்சுமி பிரணேஷ் அவர்கள் கிராமங்களில் உள்ள சுகாதாரம் மற்றும் குடிநீர்ப் பிரச்சனைகளை எவ்வாறு மேற்கொள்கிறீர்கள் என்று வினவினார்.



காந்திகிராம கிராமிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அறக்கட்டளையில் பணிபுரியும் திரு. ரவிச்சந்திரன் அவர்கள் குடும்பநல அறக்கட்டளையின் மூலம் கிராமப்புறங்களில் கழிவறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்று கூறினார்.

திருமதி ராமுத்தாய் அவர்கள் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை கிராமங்களில் உருவாக்குவது பற்றியும் மக்கள் பயன்பாடு பற்றியும் மேலும், குடிநீர் பயன்பாட்டில் சாமியார்பட்டி கிராமத்தில் நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகள் பற்றியும் விளக்கினார். திருமதி லெட்சுமி பிரணேஷ் அவர்கள் காந்திகிராம அறக்கட்டளையின் கிராமப் பணிகளைப் பாராட்டினார். மேலும். மாதிரிக் கிராமம் உருவாக்குவதற்கு மூன்று நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்டுள்ள பணிகளையும் பாராட்டிப் பேசினார்.

## மாதிரிக் கிராமத் திட்ட துவக்கவிழா

காந்திய வழியில் கிராமங்களை உருவாக்கும் பொருட்டு காந்திகிராம அறக்கட்டளை மாதிரிக் கிராமத்தை ஏற்படுத்தும் வண்ணம் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அறக்கட்டளை ஆகிய மூன்று நிறுவனங்கள் இணைந்து கிராம வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தேர்வு செய்யப்பட்ட தொப்பம்பட்டி, அண்ணாநகர், சாமியார்பட்டி



ஆகிய கிராமங்களில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்றல், அவர்களுக்குச் சுகாதாரக் கழிப்பிடம் அமைத்தல், குடிப்பழக்கம் உள்ளவர்களிடமிருந்து அப்பழக்கத்தை அகற்றுதல், புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, தன்னிறைவு பெற்ற கிராமமாக உருவாக்குவது இதன் நோக்கமாகும். மாதிரிக் கிராமம் அமைக்கும் திட்டத்தை வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் 23–04–2013 அன்று துவக்கிவைத்து, மாதிரிக் கிராமத்தில் என்னென்ன வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்று கூறினார். இக்கூட்டத்தில் மூன்று நிறுவனங்களின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

### படித்ததில் ரசித்தது...

நண்பர்கள் கூட்டத்தை ஏன் நண்பர்கள் வட்டம் என்கிறார்கள்?
சதுரத்திற்கு நான்கு எல்லை, முக்கோனத்திற்கு மூன்று எல்லை வட்டத்திற்கு எல்லையே இல்லை

## காந்திஜி ஒரு மாணவராக பகவத்கீதை படித்த சம்பவம்

முதன் முதலாக காந்திஜி வெளிநாடு சென்றபோது தனது கப்பல் பயணத்தில் ஒரு ஆங்கிலேயரின் கையில் 'கீதாஞ்சலி' என்கிற கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கண்டு சிறிது வெட்கமடைந்தார். தான் இதுவரை கண்டிராத நம் தேசத்தின் படைப்பு அந்நியர் கையில் இருந்ததே அந்த வெட்கத்திற்கான காரணம். சிறிது புரட்டிப் பார்த்தார். அது அவரை ஈர்த்தது. பிறகு தனது தாய்மொழியான குஜராத்தியில் கீதையைப் படித்தார். அது அவரை வெகுவாகக் கவர்ந்தது. அதன் மூலமொழியான சமஸ்கிருதத்தில் படிக்க வேண்டும் என்கிற ஆசை அவரிடம் துளிர் விட்டது. ஆனால், அவருக்கு சமஸ்கிருத மொழி அப்போது தெரியாது.

அந்த ஆசை வெகுநாட்களுக்கு நீறுபூத்த நெருப்பாக இருந்தது. தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பிவந்த பிறகு, சபர்மதி ஆசிரமத்தை அமைத்தார். அங்கு சமஸ்கிருதம் தெரிந்த மகாதேவ் தேசாயிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். தேசாய் சற்று பயந்துவிட்டார். தான் காந்திஜிக்குப் பாடம் கற்றுத் தருவதா? மெதுவாக வினோபா பக்கம் கைகாட்டிவிட்டு ஒதுங்கிக்கொண்டார்.

பாபுவுக்குக் கற்றுத்தருவது சாதாரண விஷயம் அல்ல. ஆனால், பாபா (வினோபா) நல்ல ஆசிரியர். சுதந்திரப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த நேரம். பாபு அடிக்கடி வெளியூர்ப் பயணம், பாதயாத்திரை, உபவாசம் போன்ற பல பிரச்சனைகளில் மாட்டிக்கொண்டிருப்பவர். காந்திஜி தவறாமல் படிக்க வரவேண்டுமென்கிற நிபந்தனையின் அடிப்படையில் வினோபா சம்மதம் தெரிவித்தார். ஒரு வழியாக மாலைப் பிராத்தனைக்குப் பிறகு, இரவு படுக்கப்போகும் முன்புள்ள இடைப்பட்ட நேரத்தில் பத்து நிமிடங்களுக்குத் தினமும் கீதையின் ஒரு ஸ்லோகம் படிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. பாபு மாணவர் – பாபா ஆசிரியர். கற்றுக்கொடுப்பதில் வினோபா மிகுந்த அக்கறை, அற்புதமான திறமை மற்றும் துணிச்சலைக் காட்டினார். அவர்தான் பகவத்கீதையைக் கரைத்துக் குடித்தவராயிற்றே!

வகுப்பும் துவங்கியது. கீதையின் முதல் அத்தியாயம் முடிந்தது. இரண்டாவது நாள் 53 ஸ்லோகங்கள் முழுவதும் பாடமாகிவிட்டன. அன்றைய தினம் 54–ஆவது ஸ்லோகத்தின்படி:

'மனதின் அனைத்து விருப்பங்களையும் விட்டுவிட்டுத் தன் ஆத்மாவிலேயே ஈடுபட்டுத் தன்னை மறந்தநிலை (ஒரு வித சமாதிநிலை)'.

மறுநாள் வினோபா வந்ததும், "இன்று வேண்டாம்" என்று பாபு கூறிவிட்டார். இவ்வாறு "இன்று இல்லை, இன்று இல்லை" என்று கூறி ஒரு மாதம் கடந்துவிட்டது. பிறகு ஒருநாள் பாபு, "வினோபா, நாளை முதல் திரும்பவும் படிக்கத் துவங்கலாம்" என்றார். ஆனால் குருவோ, "இவ்வாறு ஒழுங்காக வகுப்பிற்கு வராமல் பாடத்தைத் தொடர்ந்து படிப்பது எப்படி? அதைவிட படிக்காமலே இருக்கலாம்" என்றார். பதிலுக்கு பாபு, "வினோபா, இது என் ஒழுக்கமற்ற தன்மை அல்ல. அன்றைய பாடத்தைப் படித்து முடித்த பின்அதை அமல்படுத்த எடுத்த முயற்சியில் ஒரு மாதம் சென்று விட்டது. ஆசையை விடுவது அத்தனை எளிதாக இருக்கவில்லை. இந்த ஒரு மாத முயற்சியில் நான் ஓரளவு வெற்றி பெற்றேன். மேற்கொண்டு படித்தால் முழுவெற்றியும் கிட்டும் என்று நம்பிக்கையுடன்தான் திரும்பவும் படிக்க வந்தேன். படிப்பதை நாம் செயலில் கொண்டுவர இயலவில்லை என்றால் படித்து என்ன லாபம்? என்றார்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்கிற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப, தான் கற்றவற்றைச் செயல்வடிவிலும் செய்து காட்டியவர் பாபு. கற்றவர் எனில் கற்றுக்கொடுத்தது நம் எல்லோருக்கும். இதை நினைக்கும் பொழுதே ஆச்சரியம் ஏற்படுகிறது.

விசித்திரமான கற்றலும் கற்பித்தலும்.
ஹே ராம்!

இந்தி மொழியில் ராமாயண காவியத்தைப் படைத்த துளஸிதாஸர்,

" ஜன்ம ஜன்ம முனி ஜதனு கராஹி"
அந்த் ராம் கஹி ஆவத் நாஹி"

என்று கூறியிருக்கிறார். அதாவது ஜன்மாந்திரமாக முனிவர்கள் கடவுள் பெயரை உச்சரித்து வந்தபோதிலும் முடிவில் மரணத் தருவாயில் ராம நாமாவை உச்சரிக்கும் எண்ணம் வராது. அந்த நேரத்தில் கடவுள் நினைவு வருவதில்லை. ஒரு சிலருக்கே இது கைகூடும்.

தான் படித்தவற்றைத் தானே சோதித்துப் பார்த்து உண்மையைக் கண்டறிந்தவர் காந்திஜி; வாழ்ந்தும் காட்டியவர். 1948–ஆம் ஆண்டு ஜனவரி 30–ஆம் தேதி வழக்கம்போல் மாலைப் பிரார்த்தனைக்குச் சென்றார். இன்று சற்றே தாமதம் ஏற்பட்டதால் வேகவேகமாகப் போகிறார். எதிரில் கண்டவருக்கு வணக்கம் கூறும் நோக்கில் இரு கரங்களையும் கூப்பிய வண்ணம் செல்கிறார். 14–15 அடிகள் கூட நடந்திருக்கமாட்டார். ஒரு இளைஞன் வேகமாக வந்து அவரைக் குனிந்து வணங்கினான். உடன் இருந்த மனுபஹன் அவரை தடுக்க முயற்சி செய்தார். அவரை அந்த இளைஞன் தள்ளி விட்டதில் அவர் கையில் இருந்த ஜபமாலை மற்றும் பொருள்கள் சிதறின. அவற்றை எடுக்க மனுபஹன் குனிந்தார். அதேநேரத்தில் அந்த இளைஞன் காந்திஜியை நோக்கி மும்முறை சுட்டான். பாபுவின் இதயத்தில் பாய்ந்தன குண்டுகள். நேரம் மாலை மணி 5.14 நிமிடங்கள். அவர் வாயிலிருந்து 'ஹே ராம்' என்ற சொற்கள் வெளிப்பட்டன. பிரார்த்தனைக் கூட்டத்தில் கூப்பிய கரங்களுடனும் 'ஹே ராம்' என்ற வாயிலிருந்து வெளிவந்த சொற்களுடனும் அவர் ஆவி பிரிந்தது. அவர் முகத்தில் அபூர்வமான அமைதி, தன்னைக் கொன்றவனையும் மன்னித்துவிட்ட பெருந்தன்மை ஜொலித்தது. அதனால்தான் அவர் மகாத்மா!

நன்றி: மைத்ரி

---

## சௌபாக்கிய இல்லம்

சௌபாக்கிய இல்லத்திலிருந்து 20 குழந்தைகள் கோயமுத்தூரில் உள்ள KKID நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைத்துப் போட்டிகளிலும் சேம்பியன் II தகுதி பெற்று வெற்றிவாகை சூடித் திரும்பினர். மேலும், The Hindu பத்திரிக்கை மதுரையில் நடத்திய ஓவியப் போட்டியில் செல்வி ஜெயகீதா கலந்துகொண்டார். குழந்தைகள் கல்வியில் மட்டுமன்றி மற்ற திறமைகளையும் வளர்த்துக்கொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

24–01–2013 அன்று தேசியப் பெண் குழந்தைகள் தினம் சௌபாக்கிய இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் திருமதி இரா. ரேவதி, இயக்குநர், கிராம

விரிவாக்கம், என். இராமுத்தாய், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டு பெண் குழந்தைகளின் சமூகப் பிரச்சினைகள், தன் சுத்தம், சத்துணவு போன்ற கருத்துக்களை எடுத்துரைத்தனர்.



விவேகானந்தா கேந்திரா திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சௌபாக்கிய இல்லக் குழந்தைகள் மற்றும் பணியாளர்களுடன் கதைகள் மூலம் சமூகப் பணிகள் மற்றும் கல்வி மேம்பாடு பற்றி விளக்கிக் கூறினார்.

சென்னை உலகவங்கி நிறுவனத்தில் பணிபுரியும் திரு. சதீஷ்குமார் அவர்கள் ரூ. 78,988/– நன்கொடையாக வழங்கியுள்ளார். இத்தொகையிலிருந்து பெறப்படும் வட்டியைப் பயன்படுத்தி குழந்தைகளின் திறன் மேம்பாட்டிற்கான கல்வியைக் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் இயற்பியல் துறையில் பணிபுரியும் திரு. நரசிம்மன் அவர்கள் தனது நண்பர்கள் மூலம் ரூ. 30,000/– நன்கொடை பெற்றுத்தந்தார். இத்தொகையைக் கொண்டு கோட்டைப்பட்டி சிசுக்கள் காப்பகத்திற்கு கழிப்பறை கட்டித்தரப்பட்டுள்ளது. திரு. அனந்த நாராயணன் ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள சோலார் விளக்கு அமைப்பதற்கு சௌபாக்கிய இல்லத்திற்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

## சாந்தி காதுகேளாதோர் பள்ளி மாணவர்களின் திறமைகள்

குற்றாலத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா ஆசிரமத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு, கட்டுரை, வினா–விடை, ஓவியம் மற்றும் மாறுவேடப் போட்டிகள் நடைபெற்றன. இதில் சாந்திப் பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளனர்.



செல்வன் M. ஆனந்தபபின் என்ற மாணவன் ஓவியப் போட்டியிலும் மாறுவேடப் போட்டியிலும் முதல் பரிசைப் பெற்றுள்ளான்.

திருநெல்வேலி அண்ணா விளையாட்டு அரங்கத்தில் மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அதில் இப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றனர். செல்வன் K.பிரவீன்குமார் மாநில அளவில் நடைபெறும் 100 மீட்டர் ஓட்டப் பந்தையப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது இப்பள்ளிக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது.

## டாக்டர் சௌந்தரம் வித்யாலயா

பள்ளிக் கல்விக் குழுக் கூட்டம் 07–03–2013 அன்று நடைபெற்றது. பழைய கட்டிடத்திலிருந்த விளையாட்டுச் சாதனங்கள் புதிய பள்ளிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. புதியதாக DVD பிளேயர் மற்றும் பாட்டு, கதைகள் அடங்கிய CD மத்திய அலுவலகத்தின் நிதியுதவியுடன் வாங்கப்பட்டு குழந்தைகளுக்கு காண்பிக்கப்பட்டு வருகின்றது. பாட்டு, கதைகள் மூலம் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கற்றுக்கொள்கின்றனர்.

## காந்திகிராமத் தொடக்கப்பள்ளி

ஆத்தூர் கல்வி வட்டம் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான கல்வி விளையாட்டு விழா இப்பள்ளியில் நடைபெற்றது. அதில் பத்துப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில், ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர், இப்பள்ளி நிர்வாகி, சிறப்பு ஆசிரியப் பயிற்றுநர், பஞ்சாயத்துத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினர்.

ஆத்தூர் ஒன்றிய அளவில் அனைத்துத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கும் ஓவியம், கட்டுரை, பாடல், தனி நடிப்பு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. 5–ஆம் வகுப்புப் படிக்கும் C. கயல் அகஷ்ர்தாமா என்ற மாணவன் தனிநடிப்பில் முதலிடமும், ஒன்றாம் வகுப்பு R.கிருஷ்ணவேணி பாட்டுப் போட்டியில் மூன்றாமிடமும் பெற்று பரிசுகள் வென்றுள்ளனர்.

திண்டுக்கல் நேரு யுவகேந்திரா அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் இப்பள்ளி முதல் வகுப்பு மாணவன் செல்வன் B. தாபுரசன் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று, கேடயமும் பாராட்டுச் சான்றிதழும் பெற்று இப்பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

## கஸ்தூர்பா மருத்துவமனையில் புதிய ஓய்வு அறை

கஸ்தூர்பா மருத்துவமனைப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம் பேணுவதில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில், ஓய்வு அறை ஒன்று ரூ.10 லட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இதற்கான தொகையை செல்வி K. N. சாருமதி மற்றும் அவர்களது உறவினர்கள் நன்கொடையாகக் கொடுத்து உதவியுள்ளனர். இதற்கு 'சாரதா இல்லம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## உலக மகளிர் தினவிழா

காந்திகிராம அறக்கட்டளையில் உலக மகளிர் தினவிழா 08–03–2013 அன்று டாக்டர் டி.எஸ். சௌந்தரம் மணிமண்டபத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் காந்திகிராம அறக்கட்டளையில் அனைத்து அலகுகளிலும் பணிபுரியும் பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்துகொண்டனர்.



கிராம விரிவாக்கப் பிரிவின் இயக்குநர் திருமதி இரா. ரேவதி அவர்கள் உலக உழைக்கும் மகளிர்தினம் உருவான விதம், பெண்கள் மீதான வன்முறைத் தடுப்பு, சீடா உடன்படிக்கை ஆகியவை பற்றி எடுத்துரைத்தார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை முனைவர் ஆனந்தகுமார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது சிறப்புரையில் சர்வதேசப் பெண்கள் தினவிழாவினை அடைவதற்கு பெண்கள் நடத்திய போராட்டங்கள் பற்றி விவரித்தார். சர்வதேச மகளிர் தினவிழாக் கொண்டாட்டம் ஆரம்பித்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒரு நூற்றாண்டு காலமாகிவிட்டாலும் பெண் விடுதலை, பெண் உரிமை, பாலியல் வன்முறைகளை எதிர்த்து இன்றும் போராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

மனித சமூகம் ஆதி சமூகம் என்பது பொதுவுடமைச் சமூகமாக இருந்தது. தாய்வழிச் சமூகமாக பெண்கள் தலைமைத்துவம் பெற்று உணவு சேகரிப்பு, விவசாயம் போன்ற தொழில்களை முதன் முதலில் பெண்கள் தான் கண்டறிந்தனர். அதன் பிறகுதான் குடும்பம், தன்சொத்து என்று வந்தபோது ஆண் ஆதிக்கம் ஏற்பட்டது. பெண் அடிமையாக்கப்பட்ட விதம் பற்றியும் பெண்கள்தினவிழா உருவானது பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

## தண்ணீர் தினவிழா

குடிநீர் மற்றும் சுகாதாரத்திட்டத்தின் மூலம் அம்பாத்துரைக் கிராமத்தில் உலகத் தண்ணீர் தினவிழா 22–3–2013 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிர் குழுக்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் தற்போதுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் குடிநீர்த் தட்டுப்பாடு அகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றியும், அப்பிரச்சினைகளைப் பொதுமக்கள் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள் என்பது பற்றியும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பெங்களூரைச் சேர்ந்த



திருமதி ஹேமா, ஆராய்ச்சி மாணவி தண்ணீர்ப் பற்றாக்குறை குறித்த தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

தொப்பம்பட்டி, காந்திகிராமம், அம்பாத்துரை, காமலாபுரம் மற்றும் பச்சமலையான்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி ஆபரேட்டர், கைபம்பு மெக்கானிக் மற்றும் குடிநீர் குழுக்களுக்கான ஒருநாள் பயிற்சி காந்திகிராம அறக்கட்டளையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மேற்கூறப்பட்ட கிராமங்களில், 2006–2008 பெங்களூரில் உள்ள ஆர்கெயம் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சீர் செய்யப்பட்ட குடிநீர் கட்டமைப்புக்கள், அதன் பயன்பாடு குறித்துப் பேசப்பட்டது. மேலும், தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்தும், கிடைக்கக்கூடிய தண்ணீரைப் பெண்கள் எவ்வாறு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், தங்களது பயிற்சி எந்த அளவிற்கு குடிநீர் மேலாண்மை செய்வதற்கு உபயோகமாக உள்ளது என்பது பற்றி பயிற்சியாளர்கள் அனுபவப் பகிர்வு செய்து கொண்டனர்.

## திறன் மேம்பாட்டுப் பயிற்சி

சென்னையிலுள்ள R.V. பவுண்டேஷனும் காந்திகிராம அறக்கட்டளையும் இணைந்து கூட்டமைப்பு தலைவர்களுக்கான நிறுவன வளர்ச்சி அடிப்படைப் பயிற்சி 2 நாட்கள் நடத்தப்பட்டது. இதில் 31 கூட்டமைப்புத் தலைவர்கள் கலந்துகொண்டனர். இப்பயிற்சியில் தலைமைத்துவம், தகவல் தொடர்பு, தணிக்கை, சமூகப் பிரச்சினைகள், நிதி ஆதாரங்கள், திட்ட அறிக்கை தயாரித்தல், முரண்பாடுகளைக் கையாளுதல், கூட்டமைப்பின் நிலைத்த தன்மை, காந்திய நிர்மாணத் திட்டங்கள் ஆகியவற்றில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.



மேலும் மாதிரி கிராம ஊராட்சியை உருவாக்கும் பொருட்டு சாமியார்பட்டியைச் சேர்ந்த 20 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் காந்திய நிர்மாணப் பணிகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டன.

## காந்திகிராம குழுக் கூட்டம்

காந்திகிராம அறக்கட்டளை, காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் மற்றும் கிராமிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அறக்கட்டளை ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து தொப்பம்பட்டி கிராமத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் மாதாந்திர கிராமக்குழுக் கூட்டத்தை 08–05–2013 நடத்தியது. இக்கூட்டத்தில் மூன்று நிறுவனங்களும் இணைந்து செயல்படுத்திவரும் மாதிரி கிராம திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு கூட்டம் துவங்கியது. காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம் வேளாண் அறிவியல் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோபால் அவர்கள் காந்திகிராமம் கிராம வளர்ச்சிப் பணிகளில் எவ்வாறெல்லாம் செயல்பட்டு வருகிறது என்பதை விளக்கினார். மேலும், பார்த்தினீயம் செடி பற்றிய விளக்கம் மக்களுக்கு அளிக்கப்பட்டது. பார்த்தினீயம் அதிகளவில் விவசாய நிலங்களிலும் பொது இடங்களிலும் பரவி வளர்ந்து வருகின்றது. இதனால் விலங்குகள் மற்றும் மனித இனங்களுக்கு தீங்கு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இதனை அழிப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் இச்செடியின் மூலம் விதைகள் பரவும் முறைகள் பற்றியும் விளக்கமாக காணொளி (வீடியோ) மூலம் விளக்கப்பட்டது. இம்முகாமில் தொப்பம்பட்டி கிராம ஊராட்சி மன்றத் தலைவர், உப தலைவர், பொதுமக்கள், விவசாயிகள், சுயஉதவிக்குழுப் பெண்கள் கலந்துகொண்டனர். முகாமினை காந்திகிராம அறக்கட்டளையின் செயலாளர் திரு. கி. சிவக்குமார் அவர்கள் துவக்கிவைத்தார்கள் வைத்தார்கள். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. கோபால் அவர்கள்



பார்த்தினீயச் செடியை அழிப்பதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் திரு. S. செந்தில்குமார் அவர்கள் தென்னை மரம் ஏறும் பயிற்சி, காய்கறித் தோட்டம் அமைத்தல் பற்றி விளக்கினார். பார்த்தினீயச் செடியை அழிக்கும் பூச்சிகளை எப்படி அச்செடியில் விடவேண்டும் என்பது பற்றிய செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. திரு. P.P. சரவணன் மரம் நடுதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு பற்றிக் கூறினார். மூன்று நிறுவனப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

---

## நிறுவனத்தை அறிந்துகொள்ளும் பயிற்சி

காந்திகிராம அறக்கட்டளையில் 09–05–2013 அன்று காந்திகிராம அறக்கட்டளையில் பல்வேறு அலகுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிறுவனத்தை அறிந்துகொள்ளும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியை காந்திகிராம அறக்கட்டளையின் வல்லுநர் திரு. V.C. நடராஜன் அவர்கள் அளித்தார். இப்பயிற்சியில்

1. முறையான சிந்தனை Systems Thinking
2. தனித்திறமை Personal Mastery
3. அணியாகக் கற்றல் Team Learning
4. தொலை நோக்குப் பகிர்வு Building Shared Vision
5. எண்ண உரு Mental Models



போன்றவற்றை விளக்கினார். மேலும், இதனை செய்முறைப் பயிற்சியாக வாசகர் வட்டத்தில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு திரு. கே. ஜோசப், டாக்டர் கே. வாசுகி, செல்வி கே.எஸ். நீலா, திருமதி அஷ்டலெட்சுமி ஆகியோரைத் தேர்வு செய்துள்ளனர்.

---

## புதுவாழ்வுத் திட்டம்

நிலக்கோட்டை வட்டாரத்தில் உள்ள 23 ஊராட்சிகளில் புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான தேவையைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யும் முகாம் காந்திகிராம அறக்கட்டளையின் மூலம் 10–01–2013 முதல் 04–03–2013 வரை நடைபெற்றது. ஐந்துபேர் கொண்ட மதிப்பீட்டுக் குழு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களின் தேவைகளை அந்தந்த கிராம ஊராட்சிகளுக்கு நேரடியாகச் சென்று மதிப்பீடு செய்தது.



மேலும், எட்டு கிராம ஊராட்சிகளில் 50–க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் இருந்ததன் அடிப்படையில் அந்த கிராம ஊராட்சிகளில் இரண்டு கட்டங்களாக முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாமில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் 2100 பேர் பங்கேற்றனர். இதனுடைய அறிக்கை புதுவாழ்வுத் திட்ட மாவட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஒரு பெண்மணியின் கதை

1980–ஆம் ஆண்டு தனது 40–ஆவது வயதில் கணவரால் விரட்டியடிக்கப்பட்டு மூன்று குழந்தைகளுடன் வெளியேறிய ஒரு பெண்மணி, மனம் உடைந்து போகாமல் சமூக சேவையில் தன்னை முற்றிலுமாக ஈடுபடுத்திக் கொண்டவர். சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் விதமாக மரங்களை வளர்க்கத் துவங்கினார். தன் நாட்டில் ஏழைப் பெண்களை,



குறிப்பாக, விறகு சேகரிப்பவர்கள், தொலை தூரத்திலிருந்து தண்ணீர் சுமந்துவருபவர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து, காலி இடங்களில் மரங்களை நட்டுப் பாதுகாத்தார். பலரது கேலிப் பேச்சுக்களால் இவர் தொய்வடையவில்லை. நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நேரத்திலும்கூட, தன் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். ஆம்! அவர்தான் 2004–ஆம் ஆண்டின் உலகஅமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவைச் சேர்ந்த திருமதி பங்காளி மத்தாய் என்பவர். அவரது மரம் வளர்க்கும் திட்டத்தில் இன்று 4000 நர்சரிகளும் அடங்கும். இதுவரை 2 கோடி மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதுடன் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது. மத்தாய், கென்யாவில் மட்டுமல்ல ஆப்பிரிக்காவிலும் முதல் பெண் பட்டதாரியும் (Ph.D) நைவேடி பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துறைத் தலைவரும் ஆவார்.

அபூர்வ சாகசம், தைரியம், பணியில் முழு ஈடுபாடுகொண்ட இவரைபோல் கென்யாவில் உள்ள பெண்கள் தங்களது பெண் குழந்தைகளை வளர்க்கத் துவங்கியுள்ளனர். பங்காளி மத்தாய் இன்று தன் தேசப் பெண்களின் நம்பிக்கையும் அவர்களின் சக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறார். அதுபோல், எல்லாப் பெண்களும் தன்னம்பிக்கையோடு பெண் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துவோமாக.

# நினைவாஞ்சலி...

## காந்திய சிந்தனையாளர் மாரியப்பன்



சிறந்த காந்திய சிந்தனையாளரும் சர்வோதய நிறுவனங்களின் நண்பருமான திரு. மு. மாரியப்பன் அவர்கள் டி.டி. திருமலையுடனும் கா. கந்தசாமியுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு காந்திய சித்தாந்தங்களைக் கற்றறிந்தவர். 1969–இல் காந்தி நூற்றாண்டுவிழாப் பயிற்சியில் கலந்துகொண்டவர். வழக்குரைஞரான அவர், மதுரை நகரில் நடத்தப்பட்ட பல்வேறு காந்திய நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தியவர். மதுரை காந்தி அருங்காட்சியத்தின் செயலாளராகவும் தில்லி காந்தி அருங்காட்சியகத்தின் உறுப்பினராகவும் இருந்து திறம்பட செயலாற்றியவர். மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து சிறந்த நூல்களை வெளியிட்டவர். தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, காந்திய இலக்கிய சங்கம் ஆகியவற்றில் உறுப்பினராகவும், கதர் நிறுவனங்கள் பலவற்றிற்கு சட்ட ஆலோசகராகவும் இருந்தவர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் செனட் சபை உறுப்பினராகவும் சட்ட ஆலோசகராகவும் பணியாற்றியவர். காந்தி சிந்தனை மற்றும் ராமலிங்க தத்துவத்திற்கான ஒரு புதிய துறையை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்துவதற்கு க. அருணாச்சலம் அவர்களுடன் இணைந்து பாடுபட்டார். இப்பல்கலைக்கழகத்திதோடு இணைந்த பல கல்லூரிகளிலிருந்து 10000 மாணவர்கள் காந்தி சிந்தனைக்கான சான்றிதழ் படிப்பு மற்றும் பட்டயப்படிப்பில் சேர்ந்து படிப்பதற்கு முன் முயற்சி எடுத்தவர். கடந்த 25 ஆண்டுகளாக காந்திகிராம அறக்கட்டளையுடன் நெருங்கிய தொடர்புடையவர். காந்திகிராம கதர் அறக்கட்டளைக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிவந்தவர். மேலும், காந்திகிராம அறக்கட்டளை, கதர் அறக்கட்டளை, லெட்சுமி சேவா சங்கம் ஆகிய மூன்று நிறுவனங்களின் துணை விதிகளின் சீர்திருத்தங்கள் செய்து உதவிபுரிந்தார். மேலும், 2005–ஆம் ஆண்டிற்கான சிறந்த சர்வோதயப் பணிகளுக்கான கெய்த்தான் சத்யா அறக்கட்டளை விருதினை காந்திகிராம அறக்கட்டளை வழங்கிச் சிறப்பித்தது.

திரு.மு.மாரியப்பன் அவர்கள் 2013 எப்ரல் 28–ஆம் நாளன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய காந்திகிராம சமுதாயம் இறைவனிடம் பிரார்த்திக்கிறது.


*(For Private Circualtion Only)*

*Editorial Team :* **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**



Gandhigram Trust, Gandhigram - 624 302

**Phone :** 0451 - 2452326 & 2452400 **Fax :** 0451 - 2453347

**e_mail :** ggmtrust@sify.com **www.** gandhigram.org



அச்சிட்டோர்: டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளை, காந்திகிராமம் – 6243 302, Telefax : 0451 - 2453347